IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: OS.339/2023
DEPOSITION OF WITNESS: PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | சிந்தாமணி | | : | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | நடராஜன் | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | அரசம்பட்டு | | : | |
| Taluk/தாலுக்கா | : | சேத்பட் | Age/வயது | : | 65 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 15th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் அரசம்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**வாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 18.06.1985 தேதியிட்ட வாதி கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும்.

2. வாதி தாவா சொத்திற்கான தீர்வை செலுத்தியதற்கான தீர்வை ரசீதுகள் (3 எண்ணிக்கை )அசல் வா.சா.ஆ.2 ஆகும்.

3. தாவா சொத்து குறித்து 01.01.1985 முதல் 20.08.2019 வரை வில்லங்கச் சான்றின் கணினி நகலின் நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

4. 1ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட பட்டாவின் கணினி நகல் வா.சா.ஆ.4 ஆகும்.

5. தாவா சொத்திற்கான அ பதிவேட்டின் கணினி நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

6. 08.02.2023 தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும் சார் ஆட்சியர் அவர்களுக்கும் வாட்டாட்சியர் அவர்களுக்கும் காவல்துறை

கண்காணிப்பாளர் அவர்களுக்கும் காவல் ஆய்வாளர் அவர்களுக்கும் கொடுத்த அறிவிப்பின் நகல். வா.சா.ஆ.6 ஆகும்.

7. வாதி கொடுத்த அறிவிப்பினை 2ம் பிரதிவாதி பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.7 ஆகும்.

8. வாதி கொடுத்த அறிவிப்பினை 1ம் பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சலுரை வா.சா.ஆ.8 ஆகும்.

9. வாதி கொடுத்த அறிவிப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9 ஆகும்.

10. வாதி கொடுத்த அறிவிப்பினை சார் ஆட்சியர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10 ஆகும்.

11. வாதி கொடுத்த அறிவிப்பினை வட்டாட்சியர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.11 ஆகும்.

12. வாதி கொடுத்த அறிவிப்பினை காவல் துறை கண்காணிப்பாளர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.12 ஆகும்.

எனவே, பிராதுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.07.15 05:35:52 +0530

சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.